முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள். 12.06.2025

O.S. 266/2014

பி.வா.சா.1 – விக்னேஷ் குமார்

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1) நான் பி.டெக், எம்.பி.ஏ படித்துள்ளேன். தற்போது என்னுடைய அப்பாவின் தொழிலை தனியாக பார்த்து வருகிறேன். தற்போது சாட்சி இணைந்து பார்த்து வருவதாக சொல்கிறார். எண்ணை வியாபாரம் செய்து வருகிறேன். எனது சகோதரி வசந்தபிரியா பி.ஏ., பி.எல் படித்து தற்போது பயிற்சி எடுத்து வருகிறார். எனது அப்பா எம்.ஏ படித்து வருகிறார். என் அப்பா என் தாத்தாவுடன் சேர்ந்து எண்ணை தொழில் செய்து வந்தார் என்றால் சரிதான் ஆரம்ப காலகட்டத்தில் செய்தார்.

2) என் தாத்தாவுடன் சேர்ந்து தொழில் செய்தபோது எனது அப்பா வைத்தியநாதபுரம் வீடு, ரைஸ்மில், ஆயில் மில் உள்ளிட்டு 60 செண்ட் நிலத்தை கிரையம் பெற்றார் என்றால் எனக்கு தெரியாது. ஏ ஆர் கேம் ரோடில் உள்ள 80 செண்ட் இடத்தை எனது தாத்தா எனது அப்பாவிற்கு வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல எனது அப்பாவே வாங்கினார். அதன் அருகில் 16 செண்ட் இடத்தை எனது தாத்தா எனது அப்பாவிற்கு வாங்கி கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. கோட்டார் பிள்ளையார் கோவில் சொத்து அடங்கிய 2 செண்ட் இடத்தை எனது பாட்டி பெயரில் இருந்து எனது அப்பா பெயருக்கு மாற்றி கொடுத்தார் என்றால் கோவில் பெயரில் எந்த சொத்தும் இல்லை. நாராயணகுரு பள்ளி பக்கத்தில் உள்ள 11 செண்ட் இடமும் அதை சுற்றி உள்ள 4 கடைகளும் எனது பாட்டில் பெயரில் இருந்து எனது அப்பா பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. அதில் இடம் உண்டா என்றால் உள்ளது 4 கடைகள் இல்லை 2 கடைகள் மட்டுமே உள்ளது.

3) என் தாத்தாவும் என் அப்பாவும் சேர்ந்து நடத்திய எண்ணை கடை தற்போது எனது அப்பா கைவசம் உள்ளது என்றால் சரிதான். அந்த கடை கோட்டாரில் மெயின் ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். என் அப்பாவின் சகோதரிகளின் திருமணத்திற்கான செலவு குறித்து நேரடியாக எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 1ம் வாதி சிவகாமி அண்ணா கல்லூரியில் பேராசிரியராக வேலை பார்த்தார் என்றால் சரிதான். 1ம் வாதிக்கு அவருடைய குடும்பத்தை பராமரிப்பதற்கும் சொத்துக்கள் வாங்குவதற்கும் வருமானம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. 20.05.2009 தேதியில் எனது பாட்டி வாதிகளுக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது.

4) அந்த ஆவணம் எழுதும்போது நான் 8ம் வகுப்போ, 9ம் வகுப்போ படித்து கொண்டிருந்தேன். அந்த ஆவணம் குறித்து எனது தந்தையிடம் கேட்டால்தான் முழுமையான விவரம் தெரியும் என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள சங்கதிகள் முழுமையாக எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்வதற்கு பத்திரம் எழுதிய நபருக்கு அதிகாரம் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை தவிர எனது பாட்டி வேறு யாருக்காவது செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்தாரா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

5) 2009 ல் இருந்து 2014 வரை எனது பாட்டி எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவண சொத்துக்களுக்கு வாதிகள் வரி வகைகள் செலுத்தி வந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. 2009 ல் எனது பாட்டி எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை வாதிகள் ஏற்றுக்கொண்டு வருவாய் ஆவண பதிவேடுகளில் வாதிகளின் பெயரை மாற்றம் செய்துவிட்டார்கள் என்றால் தெரியாது. வா.சா.ஆ-8 நில வரி ரசீது வாதிகளின் பெயரில் உள்ளது என்றால் எனக்கு உரிய சொத்தின் சர்வே எண்.பி24/140 என்ற சொத்து மட்டும் என்னுடைய சொத்து ஆகும் அதற்கும் சேர்த்து வேறு சில சொத்துக்களும் நில வரி ரசீது வாதி பெயரில் உள்ளது. எனது தரப்பில் எனது அப்பாவை சாட்சியாக விசாரிக்க நான் தயாராக உள்ளேன்.

6) 2009 முதல் 2014 வரை வாதிகளுக்கும் எனது தாத்தா பாட்டிகளுக்கும் இடையே ஏதாவது பிரச்சனை ஏற்பட்டதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது பாட்டியை அடித்து காயப்படுத்தனார்கள் என்று நிரூபண வாக்குமூலத்தில் சொன்னதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. பாட்டியை அடித்து அவர்களின் வீட்டில் அத்துமீறி நுழைந்து பீரோவை உடைத்து சொத்துக்கள் சம்பந்தமான பத்திரங்கள், ஆவணங்கள், நகைகள் ஆகியவைகளை எடுத்து சென்றதாக சொல்லியதற்கு புகாரோ அல்லது அது சம்பந்தமான ஆவணத்தையோ இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை சம்பவத்தின்போது எனக்கு தெரியாது பின்புநான் கேள்விப்பட்டேன்.

7) என் தாத்தா 04.12.2013 ம் தேதியன்று இறந்தார். பொதுவாக இந்து முறைப்படி கணவர் இறந்து முதல் 41 நாட்களுக்கு மனைவி வெளியே செல்லக்கூடாது என்றால் சரிதான். 07.01.2014 ம் தேதியன்று 2009 வருடத்திய செட்டில்மெண்ட் டீட் ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தந்தை எனது பாட்டியை அடித்து மிரட்டி அழைத்து சென்று

செட்டில்மெண்ட் டீடை ரத்து செய்துள்ளார் என்றால் இல்லை சரியல்ல. மேற்படி ரத்து ஆவணத்தில் செட்டில்மெண்ட் பத்திரம் நடைமுறைக்கு வரவில்லை என்பதால் ரத்து செய்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8) அந்த ரத்து ஆவணத்தில் வாதிகள் பாட்டியை கவனிக்கவில்லை என்று எந்த விவரமும் சொல்லப்படவில்லை என்றால் எனக்கு ரத்து ஆவணம் குறித்து நேரடியாக தெரியாது. இந்த வழக்கானது 2014 ம் வருடத்தில் எனக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய கோரி தாக்கல் செய்யப்பட்டது. எனக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் 1ம் வாதிக்கும் ஒரு பகுதியை எழுதி வைக்கப்பட்டுள்ளது என்றால் சாட்சி சர்வே நம்பர் என்ன என்று கேட்கிறார் பட்டிகை சொத்தின் சர்வே நம்பர் என்று விளக்கம் கொடுக்கப்பட்ட பின்னர் அவர் எழுதவில்லை என்று கூறுகிறார்.

9) வா.சா.ஆ-6 ஆவணத்தில் சர்வே எண்.பி24/140, பி24/141, பி24/143 ஆகிய நிலங்களுக்கு எழுதப்பட்டுள்ளது என்றால் எனக்கு சர்வே எண்.பி24/140 மட்டுமே தெரியும். வா.சா.ஆ-6 ஆவணமானது எனது பாட்டியின் இயற்கையான அன்பின் அடிப்படையில்தான் எழுதப்பட்டதாக சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை எழுதும் வரையில் எனது பாட்டிக்கு 1ம் வாதி மீது எந்த விதமான வருத்தமும் இல்லை என்றால் மேற்படி ஆவணம் எழுதும்போது நான் கல்லூரியில் 2 ம் ஆண்டு படித்து வந்ததால் எனக்கு இங்கு நடந்து வந்த சம்பவங்கள் எதுவும் தெரியாது.

10) 2009 ம் ஆண்டில் எழுதப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய எனது பாட்டிக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. 2009 ல் எழுதப்பட்ட ஆவணங்கள் செல்லுபடியான ஆவணம் என்றாலும் 2014 ம் ஆண்டில் எழுதப்பட்ட செட்டில்மெண்ட் ரத்து ஆவணம் செல்லாத ஆவணம் என்றாலும் அதே ஆண்டில் எழுதப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் அதன் தொடர்ச்சியான பவர் ஆவணம் ஆகியவை செல்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் நடந்த சங்கதிகளை கூறாமல் உண்மையை மறைத்து நடந்த சம்பவங்களை மிகுதிப்படுத்தி பொய்யான சங்கதிகளை சொல்லி தாக்கல் செய்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

11) 2009 ம் ஆண்டில் எனது தாத்தாவின் வற்புறுத்தலின் பெயரில் எனது பாட்டி எழுதியதாக சொல்லப்பட்டுள்ள சங்கதி தவறானது என்றால் சரியல்ல. என் பாட்டி வாடகையை கோரி வருவாய் கோட்டாட்சியரிடம் வாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்த மனுவில் போதிய வருமானம் எனது பாட்டிக்கு உள்ளது என்று பாட்டியின் மனுவை ரத்து செய்த விவரம்

எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எனது பாட்டி பள்ளிப்படிப்பை முடித்தவர் என்றால் சரிதான். எனது பாட்டி 2009 ல் ஆண்டில் நல்ல தெளிவான மனநிலையில் ஆவணம் எழுத சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றார் என்றால் இல்லை தாத்தாவின் வற்புறுத்தலின் பெயரில்தான் சென்றார். எனது பாட்டிக்கு நிர்வாக திறமை இருந்தது என்றால் சரிதான்.

12) எனது பாட்டிக்கு என்ன ஆவணம் எழுதுகிறோம் என்ற அறிவு அவருக்கு உண்டு என்றால் சரிதான். உயில் ஆவணம் எழுத சென்று அங்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வாங்கிவிட்டார்கள் என்று வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தாத்தா, பாட்டிக்கு செய்த மருத்துவச்செலவுகள் அனைத்து நபர்களாலும் பகிர்ந்து செய்யப்பட்டவை என்றாலும் தனிப்பட்டு பிரதிவாதிகள் மட்டும் பார்த்ததாக சொல்வது வழக்கிற்காக செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. செலவுகளை அனைவரும் பகிர்ந்து கொண்டார்கள் என்றாலும் எனது பாட்டி எனது அப்பாவின் வசம் குடியிருந்து வந்தார் என்றாலும் சரியல்ல செலவையும் எனது அப்பாவே செய்தார்.

13) என் தாத்தா பாட்டி இருவரும் என் அப்பா வீட்டில் இருந்தார் என்றால் இல்லை தனியாக ஒரு வீட்டில் குடியிருந்தார்கள். ஆண் மகன் என்பதால் எனது அப்பாவிற்கு அவர்களின் பெற்றோர்களை கவனிக்க வேண்டிய கடமை உண்டு என்றால் சரிதான். எனது பாட்டியை எனது அப்பா சரியாக கவனிக்காததால் எனது பாட்டி வருவாய் கோட்டாட்சியரிடம் வருமானம் கோரி மனு தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வருவாய் துறை ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு பின் தேதியிட்டு உற்பத்தி செய்யப்பட்டவை என்றாலும் இந்த வழக்கில் ஏற்புடையது அல்ல என்றாலும் சரியல்ல. 2009 ஆவணத்தில் தாத்தா பாட்டி காலத்திற்கு பின்புதான் அனுபவத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சரத்து குறிப்பிட்டிருந்ததால் வாதிகள் எந்த பிரச்சனையும் செய்யாமல் இருந்தார்கள் என்றால் சிவகாமி பிரச்சனை செய்ததால்தான் ரத்து செய்யப்பட்டது. வாதிகளின் வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.